DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM/

SC. No:37/2022

Deposition of Witness for : P.W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : மீனாட்சி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 20.03.2023.

**Accused present.**

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் சிக்கனாபுரம் தண்ணீர்பந்தலில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இறந்த சுப்பிரமணியன் எனக்கு எனது கணவரின் அக்கா மகன் ஆவார். நான் 16.10.2021 அன்று மாலை 5.00 மணியளவில் எனது மகள் சந்தியா, சாலினி ஆகியோருடன் வரதராஜ பெருமாள் கோவிலுக்கு சென்று கும்பிட்டுவிட்டு திரும்பும்போது மாலை 5.15 மணிக்கு கோயிலுக்கு வெளியே வந்தோம். அப்பொழுது ஆஜர் 1 முதல் 3 எதிரிகளும் இளவர் கவின் என்பவரும் ஆட்டம் ஆடி வந்தார்கள். ஆஜர் எதிரிகளும் இளவர் கவின் என்பவரும் என் மீதும், என் மகள் மீதும் வந்து மோதினார்கள். ஏன் இப்படி மோதுகிறீர்கள் என கேட்டதற்கு 1-ம் எதிரி மோனீசும், 2-ம் எதிரி சந்துருவும், 3-ம் எதிரி சதீசும் அப்படித்தான் இடிப்போம் என சொன்னார்கள். மேலும் அசிக்கமான வார்த்தைகளால் " கொம்மான ஓக்க என கூறி அப்படித்தான் இடிப்போம் " என சொன்னார்கள். அப்பொழுது நங்கையா மகன் சுப்பிரமணி அங்கு வந்தார். ஏன் இப்படி பெண்களை இடிக்கிறீர்கள் என எதிரிகளைப்பார்த்து கேட்டார். அதற்கு எதிரிகள் அப்படித்தான் இடிப்போம் நீ யார் கேட்பது என்று சொன்னார்கள்.

சுப்பிரமணியை பார்த்து மோனீஸ் மற்ற இருவரும் சேர்ந்து கெட்ட வார்த்தையார் திட்டினார்கள். எதிரிகள் 3 மற்றும் இளவர் ஆகியோர் வந்து பார்த்து கொள்கிறோம் என்று போய்விட்டார்கள். என் மகள்கள் இருவரையும் வீட்டிற்கு அனுப்பினேன். நானும், சுப்பிரமணியனை அழைத்துக்கொண்டு எனது கணவரை தேடிக்கொண்டு அமராவதி ஆற்று வாய்க்கால் ரோடு அருகே சென்றோம். எதிரிகள் 3 மற்றும் இளவர் ஆகியோர் ஓடிவந்தார்கள். அப்பொழுது 1–ம் எதிரி மோனிஸ் கையில் கத்தி வைத்திருந்தார். இவர்களை பார்த்தவுடன் சுப்பிரமணி கிழக்கு பக்கமாக ஓடினார். நானும் பின்னால் ஓடினேன். சிறிது தூரம் போனவுடன் நெல் களம் ஒன்று இருந்தது. 2–ம் எதிரி சந்துரு இடது கையை பிடித்துக்கொண்டார். இன்னொரு கையை 3–ம் எதிரி சதீசும், இளவர் கவீனும் வலது கையை பிடித்துக்கொண்டார்கள். 1–ம் எதிரி மோனீஸ் இத்தோடு செத்துத்தொகை என கத்தியை எடுத்து சுப்பிரமணியை இடது தலையில் குத்திவிட்டார். அதன் பின் களத்தில் பேசிக்கொண்டு இருந்த மாயவன் , நவீன், ரமேஸ் ஆகியோர் டேய் என்னடா செய்கிறீர்கள் என சொல்லி குத்திக்கொண்டு இருக்கும்போதே ஓடிவந்தார்கள். எதிரிகள் மூவரும் இளவருடன் கத்தியை எடுத்துக்கொண்டு மேற்கு முகமாக ஓடினார்கள். என்னிடம் காட்டப்படும் சில்வர் கத்தியைக்கொண்டு தான் குத்தினார்கள். சாட்சி நவீனும், மாயவனும் சுப்பிரமணியின் இடது தலையில் ஏற்பட்டிருந்த இரத்தகாயத்தை ஒரு துண்டால் அமுக்கி பிடித்துக்கொண்டு தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் சுப்பிரமணியை நடுவில் அமரவைத்து அழைத்து சென்றார்கள். நான் எனது பிள்ளைகளுக்கு போன் செய்து தகவல் சொல்லிவிட்டு சுப்பிரமணியில் மனைவி விசாலாட்சி என்பவருக்கு தகவல் சொல்லி நானும், விசாலாட்சி பேருந்து மூலம் தாராபுரம் அரசு மருத்துவமணைக்கு மாலை 5.45 மணிக்கு சென்றோம். சுப்பிரமணிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக கோயமுத்தூர் அனுப்பினார்கள். நாங்கள் இருவரும் மீண்டும் பேருந்து மூலம் கோவை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். இரவு 8.30 மணி இருக்கும். சுப்பிரமணியை தீவிர சிகிச்சை பிரிவில் இரவு முழுவதும் வைத்திருந்தார்கள். 17–ம் தேதி நான் மதியம் 2.00 மணிக்கு அலங்கியம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். ஈஸ்வர மூர்த்தி என்பவரும் நான் சொல்ல சொல்ல எழுதினார். புகாரில் உள்ள

கையொப்பம் என்னுடையது தான் அது அ.தசா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் வீட்டிற்கு சென்றேன். 19–ம் தேதி காலை 8.30 மணிக்கு போன் வந்தது, சுப்பிரமணி இறந்துவிட்டதாக எனது கொழுந்தியா செல்வி தகவல் சொன்னார். இன்ஸ்பெக்டர் வந்தார்கள். நானும் ஆஸ்பத்திரிக்கு சென்றேன். போலீசார் எப்படி நடந்தது என விசாரித்தார்கள். நடந்ததை சொன்னேன்.

குறுக்கு விசாரணை 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் –

கோவில் எத்தனை நாட்கள் விசேசம் என்றால் புரட்டாசியில் 4–வது சனிக்கிழமை விசேச நாளாகும். ஊருக்கு நடுவில் கோவில் உள்ளது. எங்கள் ஜாதிக்காரர்களுக்கு மட்டும் தான் கோவிலுக்கு போவார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் எங்கள் ஊர்க்காரர்கள் கோவிலுக்கு வந்தார்கள் என்றால் ஆமாம். அந்த கோவிலில் சாதாரணமாக கம்பத்துக்கு முன்னார் ஆண் பெண் இருபாலரும் ஆடுவார்கள் என்றால் ஆமாம். சலங்கை கட்டி ஆடுவார்களா என்றால் நான் அதை பார்க்கவில்லை. நாங்கள் ஆடுவதை வேடிக்கை பார்க்கவில்லை. கோவில் கிழக்கு பார்த்து உள்ளது என்றால் ஆமாம். அவர்கள் ஆடிய இடத்திற்கு மேற்புறமாக நாங்கள் நின்றுகொண்டிருந்தோம். ஆஜர் எதிரிகள் மூவரும் இளவரும் ஆடினார்களா என்றால் ஆமாம். என் மீதும் என் மகள் மீதும் மோதினார்கள். மோதிய பிறகு எவ்வளவு நேரம் கழித்து சுப்பி ரமணி கோவிலுக்கு வந்தார் என்றால் 5 நிமிடம் கழித்து வந்தார். சுப்பிரமணி சட்டை போட்டிருந்தாரா என்றால் ரோஸ் கலர் சட்டை. பச்சை கலர் வேஸ்டி அணிந்திருந்தார், துண்டு அணியவில்லை. எதிரிகளிடம் கேள்வி கேட்டாரா என்றால் ஆமாம். அவர்கள் தெரியாமல் திட்டியதாக சொல்லவில்லை. வாய் சண்டை நடந்ததா என்றால் ஆமாம். பேசிவிட்டு எதிரிகள் போய்விட்டார்கள் என்றால் 1–ம் எதிரி மோனசில் அப்பா அம்மா வந்து அழைத்துப்போனார்கள். அதன் பிறகு வாய்க்கால் மேட்டிற்கு ஏன் சென்றோம் என்றால் எனது கணவர் மதியம் முதல் காணவில்லை அவரை தேடிப்போனோம். சுப்பிரமணியும் உடன் வந்தார். நான் புகாரில் எனது க ணவரை தேடிக்கொண்டு போன விவரத்தை சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம். வாய்க்கால் பாலம் அருகே எங்களைத்தவிர வேறு நபர்கள் இருந்தார்கள் என்றால் இல்லை. அதன் பிறகு, நாங்கள் போனபிறகு என் கணவர் அங்கு இருந்தார இருந்தால் அங்கு இல்லை. சுமார் 1/2 மணி நேரம் இருந்தோம். பிறகு எதிரிகள்

வந்தார்கள். 1/2 மணி நேரத்தில் வேறு யாரும் வந்தார்களா என்றால் நான் கவனிக்கவில்லை. நாங்கள் கிழக்கில் போனபோது எதிரிாகள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடி வந்தார்கள். ஆஜர் எதிரிகள் கத்தியை மடக்கி கொண்டு வந்தார்களா என்றால் இல்லை. எதிரிகள் மேற்கிலிருந்து வருவரை பார்த்தவுடன் சுப்பிரமணி கிழக்கு நோக்கி ஓடினாரா என்றால் ஆமாம். சுப்பிரமணி எவ்வளவு துாரம் ஓடினார் என்றால் சுமார் 35 அடி துாரம் ஓடினார். அங்கே நெல் அடிப்பதற்கான களம் இருந்தது. அந்த களத்திற்குள் தான் சம்பவம் நடந்தது, அந்த களம் சுமார் 50 அடி அகலத்தில் இருந்தது. களத்திற்கு எந்த புறம் நவீனும், மாயவனும், ரமேசும் இருந்தார்கள் என்றால் சற்று தள்ளி நின்று கொண்டிருந்தார்கள். களத்தில் வேறு யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. மேற்கொண்ட சாட்சிகள் மூவரும் களத்திற்கு வருவதற்குள் எதிரிகள் ஓடிவிட்டார்களா என்றால் கொஞ்சம் பக்கத்தில் இருந்தார்கள். சாட்சிகள் மூவரும் ஒரு வேட்டி சட்டை அணிந்திருந்தார்கள். சுப்பிரமணியில் இடது தலையில் 1-ம் எதிரி கத்தியால் குத்தி விட்டு கத்தியை எடுத்துக்கொண்டு சென்றார்களா என்றால் ஆமாம். இரத்தம் பீறிட்டு வந்ததா என்றால் ஆமாம். சுப்பிரமணியின் சட்டையில் இரத்தம் வந்ததா என்றால் ஆமாம். நான் கிட்டை ஓடிச்சென்று சுப்பிரமணியை பிடித்தேனா என்றால் ஆமாம். எனது சேலையில் இரத்தம் படிந்ததா என்றால் ஆமாம். களத்திற்கு வெளியே கைக் இருந்ததா என்றால் நவீன் என்ற சாட்சி பைக் வைத்திருந்தார். மூவரும் வருவதற்குள் நான் எனது சேலையால் காயத்தை அழுத்தி பிடித்தேனா என்றால் இல்லை, மாயவன் துண்டால் காயத்தை அழுத்தி பிடித்தார். அதை பிடிப்பதற்க முன்பே நிலத்தில் இரத்தக்கறை படிந்ததா என்றால் நான் கவனிக்கவில்லை. நவீன் குமார் மோட்டார் சைக்கிளை ஓட்ட நடுவில் சுப்பிரமணியை அமர்த்திக்கொண்டு பின்னால் மாயவன் அமர்ந்தது கொண்டார். சுப்பிரமணி அவரே மோட்டார் சைக்கிளில் அமர்ந்த கொண்டாரா என்றால் மாயவன் கையைப்பிடித்து அழைத்துச்சென்று அமர வைத்தார். புகாரில் களம் இருந்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். களம் ரோட்டிற்கு வடபுறமாக இருந்ததா ? தென்புறமாக இருந்ததா? என்றால் களத்து மேலே உள்ளது. மண் ரோடு தான். ரோட்டிற்கு வலபுறம் களம் உள்ளது. பாக்கி உள்ள ரமேஸ் எங்கு போனார் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் அங்கிருந்து வீட்டிற்கு நடந்து சென்றேனா

என்றால் இல்லை. அதே இடத்தில் இருந்த போன் பேசினேன். எனது பிள்ளைகளிடமும், சுப்பிரமணியின் மனைவியிடமும் தகவல் சொன்னேன். போனில் பேசிவிட்டு உடுமலை – தாராபுரம் ரோட்டிற்கு நானும், சுப்பிரமணியன் மனைவியும் பஸ் ஏறி சென்றோம். எத்தனை மணி பஸ் என்றால் நேரம் என்னால் சொல்லமுடியாது. நான் பதற்றத்தில் இருந்தேன். அந்த பஸ்சில் ஏறி ஆஸ்பத்திரிக்கு வந்தபோது 7.00 மணி இருக்கும். உடுமலை ரவுண்டானா அருகில் இறங்கினோம். ஒரு நபரின் மோட்டார் சைக்கிளில் ஏறி மருத்துவமனைக்கு சென்றோம். அப்பொழுது சுப்பிரமணி அங்கு இருந்தாரா என்றால் இல்லை. போலீஸ் விசாரணையில் நான் தாராபுரம் மருத்துவமனைக்கு சென்ற போது சுப்பிரமணியை மேற்சிகிச்சைக்காக அனுப்பியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். நாங்கள் போன போது ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு இருந்தார்கள். நான் இருந்தபோது போலீசார் அங்கு வந்தார்களான என்றால் ஆமாம். போலீசார் வந்தபோது நேரம் 7.00 மணி இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் என்ன நடந்தது, கொலை எப்படி நடந்தது என்று கேட்டபோது நான் சொன்னேனா என்றால் அதை சொல்ல நேரம் இல்லை. போலீசாரிடம் விவரம் சொல்லிவிட்டு கோயமுத்தூர் சென்றேன். போலீசார் போன பிறகு, நானும், எனது சுப்பிரமணி மனைவியும் கோயமுத்தூர் சென்றோம். கோயமுத்தூர் போனபோது என்ன நேரம் என்றால் எனக்கு நினைவில்லை. பதற்றத்தில் இருந்தேன். நான் காலையில் காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். எனக்கு நேரம் தெரியவில்லை. நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்களா என்றால் அவர் எழுதவில்லை. ஈஸ்வரமூர்த்தி எழுதினார். அலங்கியம் காவல் நிலையத்தில் வைத்து எழுதினார். அவர் எனக்கு தெரிந்த பையன் ஆவார். நான் அங்கிருந்து ஊருக்கு வந்துவிட்டேன். எனக்கு தெரிந்து போலீசார் ஊருக்கு வந்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. அன்றைய தினம் மோனீசுக்கும், அவருடைய தகப்பனாருக்கும், காயம் ஏற்பட்டிருந்ததா என்றால் இல்லை. காயம் பற்றி எனக்கு தெரியாது. மோனீசையும், அவரின் தகப்பனாரையும் நாங்கள் சென்று அடித்தோமா என்றால் இல்லை. என் கணவர் முருகேசனும், குமரேசன் ஆகிய இருவரும் 1–ம் எதிரி மோனீஸ் வீட்டிற்கு சென்று ஏன் இப்படி நடந்துகொண்டீர்கள் என கேட்டதற்கு அவர்களுக்கு சுப்பிரமணி குத்துபட்ட விவரம் தெரியாது. எனது

கணவரையும் குமரேசனையும் 1–ம் எதிரி வீட்டில் சிலபேர் தாக்கினார்கள். எனது கணவர் முருகேசன் தாராபுர் அரசு மருத்துவமனையிலும், குமரேசன் திருப்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அது சம்பந்தமாக வழக்கு கொடுத்தார்களான என்றால் அவர்கள் கொடுத்திருந்ததிருப்பார்கள். சுப்பிரமணி இறப்பதற்கு முன்னால் போலீசார் வந்தார்களான என்றால் 2, 3 முறை வந்தார்கள். 1–ம் எதிரியின் தகப்பனாரின் கை ஒடிந்தவிட்டதா என்றால் எனக்கு தெரியாது. அவர்களுக்கு காயம் ஏற்பட்டது தெரியுமா என்றால் யாரும் அடிக்கவில்லை, பொய்யாக துணியை சுற்றிக்கொண்டார்கள். நான் களத்திற்கு போனதாகவும், அங்கு எதிரிகளை கண்டதாகவும், எதிரிகள் குத்தியதாகவும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினம் சுப்பிரமணி மது அருந்தியிருந்தாரா என்றால் இல்லை. சுப்பிரமணி மது அருந்திவிட்டு போதையில் இருசக்கர வாகனத்தில் தடுமாறி கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

S. Nagarajan<br>
III Additional District and Sessions Judge,<br>
Dharapuram

<u>DEPOSITION OF WITNESS</u>
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM/

SC. No:37/2022

Deposition of Witness for : P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நவீன்குமார் | Caste | : | |
| Father's Name | : | சங்கிலி | Calling | : | |
| Age | : | | Taluk | : | |
| Village | : | | District | : | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 20.03.2023.

**Accused present.**

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் சிக்கனாபுரம் தண்ணீர் பந்தலில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மீனாட்சி எனக்கு அத்தை முறை ஆவார். இறந்து போன சுப்பிரமணியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். 16.10.2021 அன்று மாலை 5.15 மணி இருக்கும். நான் மாயவனும், ரமேசும் களத்தில் நின்று பேசிக்கொண்டு இருந்தோம். பேசியபோது ஆஜர் எதிரிகள் மூவரும், இளவுர் கவீன் என்வரும் சுப்பிரமணியை துரத்திக்கொண்டு வந்தார்கள். சுப்பிரமணியின் வலது கையை சதீஸ், கவின் பிடித்துக்கொண்டார். இடது கையை சந்துரு பிடித்துக்கொண்டார்கள். 1-ம் எதிரி மோனீஸ் கத்தியால் சுப்பிரமணியத்தின் இடது மண்டையில் குத்தினார். நாங்கள் மூவரும் ஏன் இப்படி செய்தீர்கள் என்று சொல்லிக்கொண்டே வந்தோம். நாங்கள் வருவரை பார்த்தவுடன் எதிரிகள் மேற்கு முகமாக ஓடினார்கள். சுப்பிரமணியை நானும், மாயவரும் இருசக்கர வாகனத்தில் தாராபுரம், அரசு மருத்துவமனைக்கு சேர்த்தோம். அப்போது நேரம் மாலை 6.00 மணி இருக்கும். மிகவும் சீரியசாக இருப்பதால் கோயமுத்தூர் கொண்டு செல்லுங்கள் என சொன்னார்கள். அதன் பிறகு மீனாட்சி 17-ம் தேதி அலங்கியம்

காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தார்கள். சுப்பிரமணி 19–ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். ஆய்வாளர் விசாரித்தார்.

குறுக்கு விசாரணை –

களத்துக்கு அருகில் தோட்டம் உண்டா என்றால் இல்லை. நாங்கள் இயற்கை உபாதை கழிப்பதற்காக அங்கு போயிருந்தோம். நாங்கள் பாத்ரூம் போய்விட்டு நின்று பேசிக்கொண்டு இருந்தோம். நான் கோயிலுக்கு போனேனா என்றால் இல்லை. நான் கூலி வேலை செய்கிறேன். மோட்டார் சைக்கில் யாருடையது என்றால் என்னுடையதுதான். அதன் எண்.TN 78 MA 2743 அது Hero Honda Splender ஆகும். மூவரும் பைக்கில் தான் அங்கு வந்தோம். நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது பாலத்திற்கு அருகே பொதுமக்கள் இருந்தார்ளா என்றால் இல்லை. அவர்கள் துரத்திக்கொண்டு வந்ததை நாங்கள் முதன்முதலில் பார்த்தோம் என்றால் ஆமாம். அப்போது துரத்தி வந்தபோது நாங்கள் காப்பாற்ற முயன்றபோது 10 செகண்டில் சம்பவம் முடிந்துவிட்டது. குத்தும்போது எவ்வளவு தூரம் தள்ளி இருந்தோம் என்றால் 40 அடி தள்ளி இருந்தோம். நான் அன்றைய தினம் சிவப்பு நிற சட்டை, பச்சை நிற வேட்டி அணிந்திருந்தேன். சுப்பிரமணி ரோஸ் கலர் சட்டையும், பச்சை நிற வேட்டியும் அணிந்திருந்தார். குத்திய இடத்தில் இரத்தம் வந்ததா என்றால் வந்தது அவர் சட்டையில் பட்டது. துண்டை வைத்து இறுக்க கட்டினோம். இரத்தம் நிலத்தில் விழுகவில்லை. மாயவன் துண்டை வைத்து தான் கட்டினோம். மாயவன் துண்டை வைத்து தலையை இறுக்க கட்டினோம். நான் வண்டியை ஓட்ட சுப்பிரமணியை நடுவில் உட்கார வைத்து மாயவன் கடைசியாக அமர்ந்து மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனைக்கு சென்றவுடன் நானும், மாயவனும், சுப்பிரமணியை மருத்துவரிடம் காண்பித்தோமா என்றால் ஆமாம். மருத்துவர் சுப்பிரமணியிடம் என்ன விவரம் என கேட்டாரா என்றால் சுப்பிரமணி மயங்கி இருந்தார். எங்கள் இருவரையும் மருத்துவர் என்ன நடந்தது என கேட்டார். மருத்துவரிடம் நடந்த விவரத்தை சொன்னோமா என்றால் சொன்னோம். மருத்துவர் து ண்டை அவிழ்த்து காயத்தை பார்த்தாரா என்றால் இல்லை. உடனடியாக கோயமுத்தூர் போகச்சொன்னாரா என்றால் ஆமாம். சுமார் 10 நிமிடத்தில் மருத்துவமனை ஆம்புலன்ஸ் மூலம் கோயமுத்தூருக்கு அனுப்பி வைத்தார்களா என்றால் ஆமாம். நான் உடன் சென்றேன். என்னுடன் வந்த

மாயவன் திரும்பி போய்விட்டார். எனது மோட்டார் சைக்கிளை மருத்துவமனையிலேயே நிறுத்தியிருந்தேன். கோயமுத்தூர் போன பிறகு தான் தகவல் சுப்பிரமணி யின் உறவினர்களுக்கு சொன்னேனா என்றால் போன் மூலம் சொன்னேன். காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை. கோயமுத்தூர் மருத்துவமனைக்கு போலீசார் வந்து விசாரித்தார்களா என்றால் ஆமாம். இரவு 9.00 மணிக்கு வந்தார்கள். விசாரித்தார்கள். நான் நடந்த விவரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அவர் எழுதிக்கொண்டாரா என்றால் எழுதினார். என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்று நினைவில்லை. உறவினர்கள் வந்தார்களா என்றால் சுப்பிரமணியின் மனைவி வந்தார். அவர் வரும்போது சுமார் 10, 10 1/2 மணி இருக்கும். நான் அவர் இறக்கும்போது நான் அங்கேயே இருந்தேனா என்றால் இல்லை. மருத்துவமனையில் சேர்த்த பிறகு மறுநான் மாலை வரை இருந்தேன். பிறகு வீடு திரும்பினேன். அ.சா.1 மீனாட்சி கோயமுத்தூருக்கு வந்தாரா என்றால் வரவில்லை. நான் காவல் நிலைய் போகவில்லை. ஆய்வாளர் என்னை ஊரில் வந்து விசாரித்தார். அடுத்த நான் போலீசார் என்னை விசாரித்தபோது நான் கையொப்பம் போட்டேனா என்றால் ஆமாம். சுப்பிரமணி இறந்த பிறகு நான் கோயமுத்தூர் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் போகவில்லை. மற்ற சாட்சிகளாக மாயவன், ரமேஸ் கோயமுத்தூர் போனார்களா என்றால் எனக்கு தெரியாது. எனது சட்டையில் இரத்தம் பட்டதா என்றால் ஆமாம். எனது சட்டையை போலீசார் வாங்கிக்கொள்ளவில்லை. மாயவன் சட்டையில் இரத்தம் பட்டதா என்றால் தெரியவில்லை. எனது மோட்டார் சைக்கிளை போலீசார் பார்த்து வாங்கிக்கொண்டார்களா என்றால் இல்லை. வண்டியில் இரத்தம் இருந்ததா என்றால் இல்லை. இறந்தவரின் சட்டை, வேட்டி, பனியன் இரத்தம் பட்டதா என்றால் ஆமாம். இறந்தவரின் துணியை போலீசார் வாங்கினார்களா என்றால் தெரியவில்லை. 1–ம் எதிரி மோனீசுக்கும், அவரது தகப்பனாருக்கு காயம் ஏற்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் மருத்துவமனைக்கு போனார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் இந்த சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், அப்படியொரு சம்பவம் நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்துபோன சுப்பிரமணி மது அருந்தியிருந்தாரா என்றால் அவரிம் மது வாடை எதுவும் வரவில்லை. சுப்பிரமணி

மதுபோதையில் இருசக்கர வாகனத்தில் சென்று தடுமாறி கீழே விடுத்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S. Nagarajan
III Additional District and Sessions Judge,
Dharapuram

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM/

SC. No:37/2022

Deposition of Witness for : P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | : மாயவன் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 20.03.2023.

**Accused present.**

முதல் விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் சிக்கனாபுரம் தண்ணீர் பந்தலில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அசா.1 மீனாட்சியையும், அ.சா.2 நவீன்குமாரையும், ஆஜர் எதிரிகள் மூவரையும் எனக்கு தெரியும். 16.10.2021 அன்று சுமார் 5.30 மணியளவில் ஆற்றுக்கு போகும் வழியில் உள்ள நெல் களத்தில் நானும், நவீன்குமார், ரமேஸ் ஆகியோர் பாத்ரூம் போய்விட்டு பேசிக்கொண்டு இருந்தோம். சுப்பிரமணியை ஆஜர் எதிரிகளும், இளவர் கவீன் என்பவரும் மேற்கிலிருந்து துரத்திக்கொண்டு வந்தார்கள். மோனீஸ் கத்தியை எடுத்து சுப்பிரமணியின் இடது தலையில் குத்தினார். நாங்கள் ஓடுவதற்குள் அவர்கள் ஓட்டம் பிடித்தார்கள். நான் துண்டை வைத்து தலைக்காயத்தை அழுத்தி பிடித்தேன். ரவிக்குமார் பைக்கில் நானும், நவீன் குமாரும் தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தோம். சம்பவத்தை கேள்விப்பட்டு குமரேசன் ஆஸ்பத்திரிக்கு வந்தார். குமரேசன் தான் சுப்பிரமணியை அரசு மருத்துவமனையில் சேர்த்தார். பிறகு மருத்துவர்கள் மேல் சிகிச்சைக்கு கோயமுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் கோயமுத்தூர் போகவில்லை. மறுநாள் காலை 11.00 மணிக்கு கோவை அரசு

மருத்துவமனைக்கு சென்றேன். சுப்பிரமணி சிகிச்சை அளித்தார்கள். 19–ம் தேதி காலை சுப்பிரமணி காலை சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். 19–ம் தேதி ஆய்வாளர் வந்து விசாரித்தார். நடந்ததை சொன்னேன்.

குறுக்கு விசாரணை –

நான் பாத்ரூம் போவதற்கு சென்றதாக போலீஸ் விசாரானை சொன்னேனா என்றால் இல்லை. நாங்கள் அமராவதி ஆற்று ரோடு தார் ரோடா என்றால் ஆமாம். தார் ரோட்டிற்கு வடபுறம் களமா என்றால் ஆமாம். நாங்கள் களத்தில் நின்று கொண்டிருந்தோம். அந்த ரோட்டில் வைத்து தான் சம்பவம் நடந்தது. நாங்கள் 50 அடி துூரத்தில் நின்று கொண்டிருந்தோம். நாங்கள் குத்தியதை பார்த்தவுடன் அங்கு ஓடினோமா என்றால் ஆமாம். குத்தியவுடன் சுப்பிரமணி கீழே விழுத்தாரா என்றால் இல்லை. இரத்தம் தரையில் பட்டதா என்றால் இல்லை. இறந்தவரின் ஆடைகளில் இரத்தம் பட்டதா என்றால் ஆமாம். இரத்தம் வெளியே செல்லாமல் இருக்க துணியை வைத்து அழுத்தி பிடித்தேன். நான் பிடித்துக்கொண்டு வர சுப்பிரமணியை அழைத்து சென்று வண்டியில் உட்கார வைத்தேன். நான் வண்டியின் பின்னால் அமர்ந்துகொண்டேன். இரத்தம் வராமல் துண்டால் அமுக்கி பிடித்தேன். அரசு மருத்துவமனைக்கு சென்றவுடன் மருத்துவர் இருந்தாரா என்றால் குமரேசன் வந்தார். மருத்துவமனையில் நாங்கள் மருத்துவ அறைக்குள் போனோமா என்றால் நானும் நவீன் குமாரும் போகவில்லை. குமரேசன் உள்ளே அழைத்து சென்றார். மருத்துவர் சுப்பிரமணிக்கு சிகிச்சை கொடுத்தாரா என்றால் கொடுத்தார். சிகிச்சையளித்து கட்டு போட்டாரா என்றால் ஆமாம். அதன்பிறகு ஆம்புலன்ஸ் மூலம் கோயமுத்துாருக்கு அனுப்பி வைத்தார். நவீன்குமார் கோயமுத்துாருக்கு போனார். குமரேசன் போனாரா என்றால் எனக்கு தெரியாது. தாராபுரம் மருத்துவ மனையில் நாங்கள் இருந்தபோது உறவினார்கள் வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. போலீசார் வந்தார்களான என்றால் வந்தார்கள். குமரேசனை விசாரித்தார்கள். என்னை விசாரிக்கவில்லை. குமரேசன் நடந்த விவரத்தை சொன்னாரா என்றால் நான் பார்க்கவில்லை. காவல் நிலையம் சென்று நான் விவரம் சொன்னேனா என்றால் இல்லை. 1–ம் எதிரியும், அவரது தகப்பனாரும் காயம் பட்டு மருத்துவமனையில் இருந்த விவரம் இருந்தார்கள் என்ற விவரம் தெரிந்துகொண்டேன். எத்தனை நாட்கள் இருந்தார்கள் என்ற விவரம்

எனக்கு தெரியாது. நான் ஊருக்கு வந்த பிறகு, போலீசார் வந்தார்களா என்றால் நான் 18−ம் தேதி காலை ஜி.எச். போனேன். இரவு வீடு திரும்பினேன். மோட்டார் சைக்கிள் பதிவு எண் எனக்கு தெரியாது. மோட்டார் சைக்கிளை போலீசார் வாங்கிச் சென்றார்களா என்றால் எனக்கு தெரியாது. இறந்த சுப்பிரமணி மது போதையில் இருசக்கர வாகனத்தை ஓட்டி தடுமாலை கீழே விழுத்து காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்ந்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S. Nagarajan
III Additional District and Sessions Judge,
Dharapuram

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM/

SC. No: 37/2022

Deposition of Witness for : P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 20.03.2023.

**Accused present.**

முதல் விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் சிக்கனாபுரம் தண்ணீர் பந்தலில் குடியிருக்கிறேன். அ.சா.1 மீனாட்சி, அ.சா.2 நவீன்குமா. அ.சா.3 மாயவன், மற்றும் ஆஜர் எதிரிகள் மூவரையும் எனக்கு தெரியும். 16.10.2021 அன்று வரதராஜ பெருமாள் கோவில் திருவிழா ஆகும். திருவிழ நடந்தது சாயந்திரம் 5.30 மணிக்கு நானும், சாட்சி நவீன்குமாரும், மாயவனும். பாத்ரூம் போகலாம் என அமராவதி ஆற்றுக்கு போகும் வழியில் உள்ள நெல் களத்தில் இருந்தோம். நாங்கள் பேசிக்கொண்டு இருந்தோம். சுப்பிரமணியை ஆஜர் எதிரிகளும், இளவுர் கவீனும் துரத்திக்கொண்டு வந்தார்கள். வாய்க்கால் மேட்டிலிருந்து கிழக்கு நோக்கி ஓடி வந்தார்கள். சந்துரு, சதீஸ், கவீன் சுப்பிரமணியின் கையைப்பிடித்துக்கொண்டிருந்தார்கள். இரண்டு நபர்கள் ஒரு கையையும், மற்றொரு நபர் ஒரு கையையும் பிடித்துக்கொண்டார்கள். யார் யார் எந்த கையைப் பிடித்தார்கள் என்று நினைவில்லை. மோனீஷ் கத்தியால் இத்தோடு சென்று தொலை என் சொல்லி சுப்பிரமணியின் இடது மண்டையில் குத்தினார். நாங்கள் 4 0 அடி துாரத்தில் ஓடிவருவரை பார்த்து எதிரிகள் ஓட்டம் பிடித்தார்கள். சுப்பிரமணி சிறிது மயக்கத்தில் இருந்ததால் துண்டை எடுத்து இரத்தத்தை அழுத்தி

பிடித்தோம். சுப்பிரமணியை நவீனும், மாயவனும் பைக்கில் வைத்து மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். பிறகு கூட்டமாக கூடியது. சுப்பிரமணி 19ம் தேதி கோயமுத்தூரில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். 19–ம் தேதி மருத்துவமனைக்கு சென்றேன். போலீசார்கள் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை –

நான் அதே ஊர் என்றால் ஆமாம். பண்டிகை ஊர் கூடி தான் நடந்தது என்றால் சரிதான். நான் கோவில் பொறுப்பில் இல்லை. சாயங்காலம் எதற்காக போனோம் என்றால் நானும், நவீனும் இருசக்கர வாகனத்தில் பாத்ரூம் போவதற்காக சென்றோம். மாயவன் ஏற்கனவே அங்கு நின்றுகொண்டிருந்தார். பாத்ரூம் போய்விட்டு நின்று பேசிக்கொண்டு இருந்தோம். துாரத்தில் துரத்தி வருவது தெரிந்ததா என்றால் இல்லை. துாரத்திக்கொண்டு வருவது தெரியவில்லை. சப்தம் கேட்டு பார்த்தோமா என்றால் குய்யோ முய்யோ என சப்தம் கேட்டது. பார்த்தபோது குத்திவிட்டார். ஓடிவந்தோம். நாங்கள் கிட்டே சென்றோம். இறந்தவர் சட்டை வேட்டி அணிந்திருந்தார். இரத்தம் லைட்டாக வந்தது. இரத்தம் அதிகம் வரவில்லை. துண்டை வைத்து அழுத்தி பிடித்தோம். எங்கள் துணியில் இரத்தம் படியவில்லை. சுப்பிரமணியத்தில் சட்டையில் மட்டும் சிறிது இரத்தம் படிந்தது. எந்த துணியை வைத்து காயத்தை பிடித்தோம் என்றால் துண்டை வைத்து அழுக்கி பிடித்தோம். ஒவ்வொருவரும் கையை பிடித்துக்கொண்டோம். யார் காயத்தை அழுத்தி பிடித்தோம் என்றால் நினைவில்லை. சுப்பிரமணியைத்தை மோட்டார் சைக்கிளில் அவரே ஏறினாரா என்றால் அவர் லேசான மயக்கத்தில் இருந்தார். நானும் மாயவனும் கைத்தாங்கலாக அழைத்து மோட்டார் சைக்கிளில் அமர வைத்தோம். தகவல் தெரிந்து கூட்டம் வந்தது. யாராவது காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்களா என்றால் தெரியவில்லை. நான் தகவல் கொடுக்கவில்லை. நான் என் வீட்டிற்கு வந்தபோது சுப்பிரமணிக்கு என்ன ஆனது என தெரியவில்லை. வழக்கு கொடுத்தார்களா என்றால் மறுநான் தெரிந்து கொண்டேன். வழக்கு காலை 8– 9 மணிக்கு கொடுத்திருப்பதாகவும், கோயமுத்தூர் போயிருப்பதாக சொன்னார்கள். அன்றைய தினம் போலீசார் வந்தார்களா என்றால் தெரியவில்லை. அன்று முழுவதும் போலீசார் என்னை பார்த்தார்களாக என்றால் இல்லை. சுப்பிரமணி இறந்த அன்று தான்

விசாரித்தார்கள். போலீசர் நிறைய முறை வந்துபோனார்கள். எனக்கு நினைவில்லை. சுப்பிரமணி அன்றைய தினம் மது போதையில் இருந்தார் என்றும், இருசக்கர வாகனத்தை போதையில் தடுமாறி கிழே விழுத்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அன்று மோனீசுக்கும், அவரின் தகப்பனாருக்கும் காயம் ஏற்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. நான் தான் இந்த வழக்கில் முன்னால் நின்று வழக்கை போட வைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் இந்த பொய் வ ழக்கை தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரியல்ல. நான் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S. Nagarajan
III Additional District and Sessions Judge,
Dharapuram

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM/

SC. No: 37/2022

Deposition of Witness for : P.W.5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சந்தியா | Caste | : | |
| Father's Name | : | | Calling | : | |
| Age | : | | Taluk | : | |
| Village | : | | District | : | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 20.03.2023.

**Accused present.**

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் சிக்கனாபுரம் தண்ணீர் பந்தலில் குடியிருக்கிறேன். நான் கல்லூரியில் எம்.இ. முதலாம் ஆண்டு படித்து வருகிறேன். சம்பவ சமயத்தில் இ.சி.இ. 4–ம் ஆண்டு படித்து வந்தேன். அ.சா.1 மீனாட்சி எனது தாயார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது அக்கா ரஞ்சிதா திருமணம் ஆகி போய்விட்டார். மற்றொரு சகோதரி சாலினி அரசு கலைக்கல்லூரியில் பி.ஏ. முதலாம் ஆண்டு படித்து வருகிறார். இறந்து போன சுப்பிரமணி எனது மாமா ஆவார். 16.10.2021 அன்று மாலை 5.00, 5.15 மணி இருக்கும். நானும், அ.சா.1, எனது தங்கை சாலினியும் வரதராஜ பெருமாள் கோவிலில் சாமி கும்பிட்டு விட்டு வெளியே வந்து நின்றோம். அப்போது ஆஜர் எதிரிகள் மற்றும் ஒரு கவின் ஆடிக்கொண்டே வந்தார்கள். எனது மீதும, எனது தங்கை, அம்மா மீதும், என் மீதும் 4 பேரும் விழுந்தார்கள். எனது தாயார் எதிரிகளை பார்த்து இப்படித்தான் மேலே விழுவீர்களாக என கேட்டபோது எதிரிகள் எங்களை பார்த்து கெட்டவார்த்தைகளால் திட்டி அப்படித்தாள் விழுவோம் என சொல்லி உங்களால் என்ன செய்யமுடியுமோ பார்த்துக்கொள்ளுங்கள் என சொன்னார்கள். அப்பொழுது அந்த கோவில் வழியாக எனது மாமா பால சுப்பிரமணி (எ) சுப்பிரமணி வந்தார். எனது தாயாரிடம் விவரம் கேட்டார். எனது தாயார் நடந்த விவரங்களை

சொன்னார். எனது மாமா எதிரிகளை பார்த்து நீங்கள் அக்கா, தங்கையுடன் பிறக்கவில்லையா ? இப்படித்தான் பெண்கள் மீது விழுவீர்களா என வினவினார். எதிரிகள் எனது மாமாவை பார்த்து அப்படித்தான் விழுவோம். உன்னால் முடிந்ததை பார் என்று சொன்னார்கள். அதன் பிறகு அவர்கள் சொந்தக்காரர்கள் வந்தார்கள். சந்துரு, ச தீஷ், சகோதரிகள் மற்றும் தாயார் வந்து அவர்களை அழைத்து போனார்கள். 1–ம் எதிரி மோனீஷ் எனது மாமாவை பார்த்து இருடா வந்து உன்னை பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார். பிறகு எனது அம்மா வும், மாமாவும் எனது தகப்பனாரை பார்த்து வருகிறோம் என சொல்லிவிட்டு போனார்கள். நாங்கள் வீட்டிற்கு சென்று விட்டோம். சிறிது நேரத்தில் அனைவரும் ஓடிக்கொண்டு இருந்தார்கள். என்னவென்று கேட்டேன். அப்போது சுப்பிரமணியை மோனீஸ் குத்திவிட்டதாக கேள்விப்பட்டேன். எனது அம்மாவிற்கு போன் செய்தபோது நான் தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு எனது மாமாவை பார்க்கபோவதாகவும், வீட்டில் பத்திரமாக இருங்கள் என சொன்னார். பின்னர் மீண்டும் சிறிது நேரம் கழித்து தொடர்பு கொண்டபோது மேல்சிகிச்சைக்காக கோயமுத்தூர் கொண்டு சென்றார்கள். எனது தகப்பானாரும், குமரேசனும் மேலே விழுந்த தகவல் கேள்விப்பட்டு நேரடியாக 1–ம் எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்கப்போனார். அந்த வீட்டில் இருந்த 2, 3 எதிரிகளின் சகோதரி, பெற்றோர்கள். மற்றும் 1–ம் எதிரி ஆகியோர் சேர்ந்து எனது தகப்பனாரையும், குமரேசனையும் அடித்து காயப்படுத்தினார்கள். அவர்கள் தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தார்கள். 19.10.2021 அன்று சுப்பிரமணி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இதுபற்றி 17.10.2021 மதியம் 2.00 அலங்கியம் காவல் நிலையத்தில் எனது தாயார் புகார் கொடுத்தார். இது பற்றி என்னை 25.10.2021 அன்று போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை –

கோவில் முன்பு ஆண், பெண் இருபாலரும் ஆடுவார்கள் என்றால் ஆமாம். சலங்கை கட்டி ஆடுவார்களா என்றால் இல்லை. ஆடும்போது தாரை தப்பட்டை இருக்கும் என்றால் ஆமாம். ஆடும்பொழுது வேடிக்கை பார்ப்பவர்கள் தள்ளி நிற்கவேண்டும் என்றால் சரிதான். ஆடும் பொழுது தவறி மேலே விழலாம் என்றால் சரிதான். கூடி நின்ற மற்ற பெண்கள் இது குறித்து கேட்டார்களா என்றால் அவர்கள்

அப்படித்தான் விலகி வாருங்கள் என்று சொன்னார்கள். அவ்வாறு சொன்னவுடன் நாங்கள் விலகி நின்றோமா என்றால் ஆமாம். 2–ம் முறையும் எதிரிகள் மறுமடியும் மேலே விழுவது போல் வந்தபோது தான் கேட்டார்கள். போலீஸ் விசாரணையில் எதிரிகள் கெட்ட வார்த்தை பேசினார்கள் என சொல்லவில்லை என்றால் ஆமாம். போலீஸ் விசாரணையில் எதிரி வீட்டைச்சேர்ந்த பெண்மணிகள் கெட்ட வார்த்தையால் திட்டியதாக சொன்னேனா என்றால் இல்லை. எனது மாமா வந்தவுடன் வாய் சண்டை வந்தவுடன் எதிரிகள் போய்விட்டார்களா என்றால் ஆமாம். அதன் பிறகு நாங்கள் வீட்டிற்கு சென்றோம் என்றால் ஆமாம். நானும் எனது தங்கை சாலினியும் மட்டும் எனது வீட்டிற்கு வந்தோம். அதன் பிறகு நான் தான் எனது தாயாருக்கு போன் செய்தேனா என்றால் ஆமாம். தகவல் சொன்னவுடன் எனது தாயார் உடனடியாக வீடு திரும்பினாரா என்றால் இல்லை. யார் குறிப்பாக எனது தகப்பனார் குத்துபட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 1–ம் எதிரியும், அவரது தகப்பனாரும் காயம் பட்டு தாராபுரம் அரசு மருத்துவமனையில் சேர்ந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனாரும், குமரேசனும் அடிபட்டு மருத்துவமனையில் சேர்ந்ததாக சொல்லும் விவரத்தை பொருத்து நேரடியாக மருத்துவமனைக்கு சென்று பார்த்தேனா என்றால் இல்லை. இது பற்றி போலீசார் விசாரித்தார்களா என்றால் சுப்பிரமணி இறந்த பிறகு தான் விசாரித்தார்கள். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S. Nagarajan
III Additional District and Sessions Judge,
Dharapuram

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM/

SC. No: 37/2022

Deposition of Witness for : P.W.6

| | | | |
|---|---|---|---|
| Name | : சாலினி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 20.03.2023.

**Accused present.**

முதல் விசாரணை

(LW6, அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டார்.)

சத்தியமாக சொல்கிறேன். நான் சிக்கனாபுரம் தண்ணீர் பந்தலில் குடியிருக்கிறேன். அ.சா.1 மீனாட்சி எனது தாயார். அ.சா.5 சந்தியா எனது சகோதரி. மற்ற சாட்சிகள் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இறந்து போன சுப்பிரமணி எனக்கு சுப்பிரமணி நான் கல்லூரியில் இளங்கலை தமிழ் படிப்பு 2-ஆம் ஆண்டு படிக்கிறேன் 16.10.2021 அன்று மாலை 5.00 மணி இருக்கும். எங்கள் வீட்டில் அருகில் உள்ள வரதராஜ பெருமாள் கோவிலுக்கு நானும், எனது தாயார் மீனாட்சி, எனது சகோதரி சந்தியாவும் சாமி கும்பிட சென்றோம். 5.15 மணிக்கு சாமி கும்பிட்டு விட்டு கோயிலுக்கு முன்பு நின்றோம். அப்போது ஆஜர் எதிரிகளும். இளஞ்சிறார் கவின் என்பவரும் ஆட்டம் ஆடிக்கொண்டே வந்து எனது தாயார் மீதும், எங்கள் மீதும் விழுந்தார். அப்பொழுது கோவிலுக்குள் டிரம் செட் அடித்துக் கொண்டு இருந்தார்கள். எனது அம்மா அவர்களிடம் வினவியபோது அப்படித்தான் விழுவோம் என்று சொன்னார்கள். எனது தாயாருக்கு எதிரிகளுக்கு ம் வாய் தகராறு ஏற்பட்டது.

அப்பொழுது எனது மாமா பாலசுப்பிரமணி (எ) சுப்பிரமணி சாமி கும்பிடுவதற்காக வந்தார். ஏன் இங்கு நிற்கின்றீர்கள் என கேட்டார். நடந்த சம்பவத்தை சொன்னோம். ஏன் இவ்வாறு இடித்தீர்கள் எதிரிகளை பார்த்து சுப்பிரமணி வினவினார். அப்படித்தான் இடிப்போம் கேட்பதற்கு நீ யார் என்று எதிரிகள் சுப்பிரமணியைப் பார்த்து கேட்டார். வாய் தகராறு அதிகமானதால் என்னையும், என் சகோதரியையும், என் தாயார் வீட்டிற்கு செல்லுங்கள் என கூறி எனது தகப்பனாரை பார்த்து வருவதாக மாமாவுடன் வாய்க்கால் மேட்டிற்கு சென்றார். நாங்கள் வீட்டிற்கு வந்தவுடன் சிறிது நேரம் கழித்து பொதுமக்கள் ஓடினார்கள். ஏன் என்று வினவியபோது எனது மாமாவை 1–ம் எதிரி கத்தியால் குத்தியதாகவும். மற்ற எதிரிகள் பிடித்துக்கொண்டதாக கேள்விப்பட்டேன். என் தாயாரை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது இதை சொன்னார். மேலும் தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு போவதாக சொன்னார். எனது தகப்பனாரும், குமரேசனும் 1–ம் எதிரியிடம் கேட்டதாகவும், அவர்கள் திட்டியதாகவும் கேள்விப்பட்டேன். எனது தகப்பனாரை தாராபுரம் அரசு மருத்துவமனையிலும், குமரேசனை திருப்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். நான் அப்பாவுடன் ஆஸ்பத்திரியில் இருந்தேன். 19–ம் தேதி எனது மாமா இறந்துவிட்டதாக எனது தாயார் சொன்னார் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை –

1–ம் எதிரி மோனீஷ் என்னுடன் கல்லூரியில் ஒன்றாக ஒரே வகுப்பில் படிக்கிறார்களா என்றால் ஆமாம். கோயிலில் விஷேசத்தின் போது பெண்களும் ஆடுவார்கள் என்றால் ஆமாம். தாரை, தப்பட்டை காதை பிளக்கும் என்றால் ஆமாம். மூவரை இடித்தது தவறி இடித்தார்களா? வேண்டும் என்றே இடித்தார்களா என்றால் எப்படி இடித்தாலும் மீண்டும் கேட்டபோது மரியாதையாக பதிலளிக்கவில்லை. வேறு பெண்கள் யாறும் எதிரிகளை விரட்டினார்களா என்றால் இல்லை. ஆனால் அவர்கள் வீட்ட ஆட்கள் வந்து அழைத்து சென்றார்கள். என் தகப்பனார் காலையில் சென்றவர் வீடு திரும்பவில்லை. அதனால் எனது தாயார் எனது தகப்பனாரை தேடி சென்றார். போலீசார் விசாரணையில் இந்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நாங்கள் தான் தாயாருக்கு போன் செய்தோம். அன்றைய தினம் எனது

தகப்பனார் 16–ம் தேதியே அடிபட்டு மருத்துவமனையில் இருந்தாரா என்றால் ஆமாம். எனது அப்பாவை என் தாயார் மருத்துவமனையில் பார்த்துக்கொண்டாரா என்றால் இல்லை. நான் பார்த்துக்கொண்டேன். 17–ம் தேதி தான் எனது தாயார் வீடு திரும்பினார். நான் 17–ம் தேதி காலை 10. மணி முதல் 19–ம் தேதி வரை இருந்தேன். போலீசார் எனது தகப்பனாரை தாராபுரம் மருத்துவமனையில் போலீசார் விசாரித்தார்களா என்றால் ஆமாம். எனது தகப்பனார் வாக்கு மூலம் கொடுத்தாரா என்றால் ஆமாம். அந்த மருத்துவமனையிலேயே 1–ம் எதிரியும், அவருடைய தகப்பனாரும் இருந்தார்களா என்றால் ஆமாம். அவர்களையும் போலீசார் விசாரிரத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் கவனிக்கவில்லை. 17–ம் தேதி என்து தாயார், எனது தகப்பனாரை பார்க்க மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு வந்தார் என்றால் மதியம் 3.00 மணிக்கு வந்தார். அப்பொழுது 1–ம் எதிரியும், அவரது தகப்பனாரும் அதே மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்களா என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக எனது தாயார் சொல்லி எனக்கு தெரியுமா என்றால் ஆமாம். மீண்டும் போலீசார் வந்தார்களா என்றால் மாலை 4.30– 5.00 மணிக்கு வந்தார்கள். என் தாயார் எங்களுடம் அதன் பிறகு எங்களுடன் இருந்தார். 19–ம் தேதி சுப்பிரமணி இறந்தவுடன் தகவல் கேட்டு கோயமுத்துருக்கு புறப்பட்டார். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும், சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S. Nagarajan
III Additional District and Sessions Judge,
Dharapuram